உ

கணபதி துணை.

சொரூபானந்தப்பொருளாகிய

# உபநிடதம்

மூலமுமுரையும்.

இவை

யாழ்ப்பாணத்து நல்லூர்

சதாசிவப்பிள்ளையவர்களால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஐந்தாம் பதிப்பு.

கீலக ௵ ஐப்பசி ௴. 1908

இதன்விலை அணா - ௩

மகாமகோபாத்தியாய ... 14100

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

உ

கணபதி துணை.

# உபநிடதம்

## மூலமுமுரையும்.

## பாயிரம்.

### விநாயகவணக்கம்.

மெய்யுடைய வடியார்மேல் விருப்புடையான் கருப்பூர விளக்குப் போலென், பொய்யுடைய வருள்போதப் பொருளுடையா னருளுடையான் பொறியைந்தாலு, மையுடைய மனத்தாலு மயக்குடையார் மதங்களைத்தா மதங்க ளாக்குங், கையுடைய முகமுடையா னகமுடையான் றனைக்கருத்தி லிருத்தல் செய்வாம்.

இதன்பொருள். சத்தியத்தையுடைய அடியார்மேல் விருப்பத்தையுடையவன், கருப்பூரதீபம்போல் எனது பொய்யுடைந்துபோக அருளிய போதமாகிய பொருளையுடையவன், அருளையுடையவன், பஞ்சேந்திரியங்களாலும் இருளையுடைய மனத்தாலும் மயக்குடையவர் மதங்களைத் தாம் கெடுதல்செய்விக்குங் கையையுடைத்தாகிய முகத்தையுடையவன், எல்லாருள்ளத்தையுந் தனக்கிருப்பிடமாகவுடையவன் எனப்படுகின்ற கணேசனைக் கருத்தினிடத்திலிருத்துவாம். என்றவாறு. (க)

குருவணக்கம்.

நானிவன்று னவனென்றே நவின்றறியா தேயுழ ன்ற நாயி னேற்குத், தானமரு நிலையிதுவே தாந்தவுபசா ந்தமிது தானே தானு, மோனமொழி யிதுவெனநான் மறையினுப நிடதமொழி முடிவு காட்டு, ஞானகுரு தேசிகனை நாவகத்தும் பாவகத்து நவிற்றுவாமே.

இ - ள். நான் இவன் தான் அவன் என்கிற கற்பனையைச் சொல்லி அறியாது அலைந்து திரிந்த அடியேனுக்கு, தானும் அமருகின்ற நிலை இதுவென்றும், வேதாந்தவுபசாந்தம் இது வென்றும், தானே தன்மயமாகும் மௌனவசனம் இதுவென் றும், நான்குவேதங்களிலும் சொல்லப்பட்ட உபநிஷத்வாக்கி யங்களது முடிவைக் காட்டிய ஞானகுருதேசிகனை நாவினிடத் தும் பாவினிடத்தும் துதிப்பாம். எ - று. (உ)

அவையடக்கம்.

ஓதுசுரு திகளுன்கி னுபநிடத மெண்ணுன்கி னுரைக டோய்ந்து, போதுமொரு வேதாந்த சொரூபா னந் தப்பெயரைப் புனைந்த நூலி, னீதிபெரி யோருரை ப்ப வதனை யன்பொன் றில்லாத நெஞ்சி னுல்யா, னுத ரவு கொடுபிதற்றி யெனதறியா மையையும் வெளி யாக்கி னேனே.

இ - ள். அத்தியயனஞ் செய்யப்பட்ட வேதங்கள் நான்கி லும் உண்டான உபநிடத்து முப்பத்திரண்டிலுமுள்ள பொருள் களைத் தோய்ந்து வந்த ஒப்பற்ற வேதமுடிவான சொரூபான ந்தமென்னும் பெயரைத் தரித்த வடமொழி ஞானநூலினது மகிமையை மகத்துக்கள் சொல்ல, அதனைப் பத்தியொன்று மில்லாத மனசினுலே யான் ஆதரவுகொண்டு தமிழ்ப்பாடலாக

இந்நூலைச் சொல்லி, எனது அறியாமையை வெளிசெய்தேன். எ - று. (௬)

பாயிரமுற்றிற்று.

---

## நூல்.

### ஞானசாதனநிலை.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம் புத்திவிசா ரித்தறியும் பொலிவதனா லரவாந், தன்போல விலையெனலா லகங்கார மதமா தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினா ஞயா, மின்போலுஞ் சலனமன மசையாம னிறுத்தி விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால் வைத்தவிடந் திருந்துசித்த மகத்துவமுந் தருமே.

இ - ள். இச்சாசொரூபமாயிருக்கின்ற பொன்போலப் பிரகாசிக்கின்ற மனமானது சஞ்சலவியாபாரத்தால் குரங்கு போல்வதாகும். புத்தியானது சகலத்தையும் விசாரித்து அறிகின்ற பொலிவையுடைமையால் கண்ணே செவியாகச் சகல மந்திரங்களையும் அறிகிற பாம்புபோல்வதாகும். கிரியாசொரூபமாயிருக்கின்ற அகங்காரமானது தனக்குச் சமானமில்லையென்று செருக்குற்று நிற்கையால் மதத்தினால் தன்னைமறந்திருக்கிற யானைபோல்வதாகும். நிகிருஷ்டவிஷயத்திலே தனக்குத் தானே ஒப்பாயிருக்கிற சித்தமானது விஷயவாசனையை ஏகாக்கிரஞ்செய்கிற தன்மையால் சுஞ்சிவார்க்கிறவன் பிறகே திரிகிற நாய்போல்வதாகும். ஆகையால், மின்னல்போலத் தோன்றி மறைகின்ற மனத்தைச் சலனப்படாமல் நிறுத்தி, விசாரணைசெய்கின்ற புத்தியைத் தானேதானாயிருக்கின்ற அறிவு

டனேகூட்டி, வலிமையோடு எழுகின்ற அகங்காரத்தையும் கொன்றால், சித்தமானது வாசனுக்ஷயமாய்ப் புத்திக்குச் சாக்ஷியான சைதன்னியத்தைப் பிரகாசிக்கப்பண்ணும். எ - று. (க)

## இதனை இது அறியுமென்றல்.

சத்தமுதலைந்தனையும் பொறிகளறியும்பொறிகடம்மைத் தானு, யொத்தகரணமதறியுங் கரணத்தையறியுமுயிருயிரைத்தானு, நித்தியமாயிருந்தறியுஞ் சாட்சியகண்டாகார நீங்கி மேலா, யித்தனையும் பகுத்தறியுமறிவுவடிவாயிருப்ப தியல்பதாமே.

இ - ள். சத்தமாதியாகிய நாமரூபாத்துமகவிஷயங்களைச் சுரோத்திராதிகளான ஞானேந்திரியங்களறியும். அந்த ஞானேந்திரியங்களைத் தானுமொத்திருக்கின்ற அந்தக்கரணமறியும். அந்த அந்தக்கரணத்தைச் சீவனறியும். அந்தச்சீவனைச் சீவசாக்ஷி அழிவின்றியிருந்து அறியும். அகண்டாகாரவிருத்தி நீங்கி மேலாய் இவைகளையெல்லாம் அறியுமறிவே சொரூபசுபாவமாம். எ - று.

விஷயமுதல் சாக்ஷிவரை ஒன்றையொன்று அறியுமாறு கூறியது. (உ)

## அறிபொருள் அறியப்படும் பொருள்களினியல்பு.

விடையமறிந் திடும்பொறிகள் விடையமாமோ மிக்கபொறி யறிகரணம் பொறிகளாமோ, வடையவறி சீவனந்தக் கரணமாமோ வதனையறிந் திடுஞ்சாக்ஷி சீவனுமோ, தடையறவொன் றனையறியு மொன்று மேலாஞ் சாட்சியையொன் றுலறியத் தகுமோ தானு, யிடையறவொன் றிலகுமெனி லதனைக் காண்டற் கேதுண்டா மதுவாகி யிருந்து காணே.

இ - ள். கடாதிகளைப் பார்த்து அறிகின்ற இந்திரியங்கள் கடாதிகளாகாவாம். இந்திரியத்துவாரத்தாற் புறப்பட்டுக் கடத்தைத் தோற்றுவிக்கின்ற அந்தக்கரணம் இந்திரியமாகமாட்டாது. அவ்வந்தக்கரணத்தை அறிகின்ற சீவன் அந்தக்கரணமாகாது. சீவனையறிகின்ற சிவசாக்ஷி சீவனுகாது. தடையில்லையாக ஒன்றனை ஒன்று அறியும் இவற்றுக்கெல்லாம் மேலான இந்தச்சாக்ஷியே சைதன்னிய மாத்திரமாயிருந்தால் அதனையறிய வேறொரு அறிவில்லாதபடியினாலும், இந்திரியகோசரமாயிருக்கும் பிரபஞ்சமெல்லாம் சைதன்னிய விவர்த்தமாகையாலும், அந்தச்சைதன்னியத்தை அறிவதற்கு வேறொன்றற்குக் கூடுமோ? இடையறுமல் ஒன்றாய் விளங்குமெனில் அதனையறிதற்கு உள்ளது யாது? ஆதலால், ததாகாரமாயிருந்து அதனையறிக. எ - று.

விஷயமுதல் சாக்ஷிவரைக்கும் ஒன்றையொன்றறியுமிடத்து, அறியும்பொருள் அறியப்படும் பொருளாகாதென்பது கூறியது. (௬)

## விருத்திஞானத்திரயவியல்பு.

மேயமனோ விருத்தியகண் டாகார விருத்தி விவே
கவிருத் தியொடிவையே விருத்திகண்மூன் றுகு, மாய
மனோ விருத்திவிட யாஞ்ஞானம் போக்கி யவ்விடயந்
தோற்றுவிக்கு மகண்டமெனும் விருத்தி, தூயசிதஞ்
ஞானத்தைப் போக்கியச்சாட் சியையே தோற்றுவிக்
கும் விவேகவிருத் தியுமகண்டாஞ் ஞானம், போயிடச்
ச்சீ வன்சாட்சி பூரணமே தானும் போதகிலே பொருந்து
மெனப் புகன்றிடுநான் மறையே.

இ - ள். மனோவிருத்தி, அகண்டாகாரவிருத்தி, விவேகவிருத்தி என விருத்தி மூன்றாகும். இவைகளில், மனோவிருத்தி

ஞானமானது கடாதிவிஷயத்தை மறைத்திருந்த அஞ்ஞானத் தைப் போக்கிச் சீவனுக்கு அவற்றைத் தோன்றச்செய்யும். அக ண்டாகாரவிருத்திஞானமானது கூடஸ்தரை மறைத்திருந்த அஞ்ஞானத்தைப் போக்கிக் கூடஸ்தரைத் தோன்றச்செய்யும். விவேகவிருத்திஞானமானது சொரூபவியாபகத்தை மறைத்தி ருந்த அஞ்ஞானத்தைப்போக்கிக் கூடஸ்தரையும் வியாபகசை தன்னியத்தையும் ஏகமாக்கித் தானும் அந்தவறிவினிடத்தடங் கிப் பிரபஞ்சத்தோற்றரவையும் சின்மாத்திரமாக்குமென்று நான்கு வேதங்களுஞ் சொல்லும். எ - று.

விருத்தித்திரயஞானத்தால் அஞ்ஞானநிவிர்த்தியும் சொரூ பத்தோற்றமும் கூறியது. (எ)

## ஞானி அஞ்ஞானி விருத்தி நிலைமை.

மிக்கபரா தீனர்களே யுலகமெலா மதில்விருப்பு வெறுப்பற் றோர்க, டொக்கமனோ விருத்தியணு மாத்தி ரமா வறிவகண்ட சொரூப மாகு, மக்கதிக டோாதா ரறிவணுவா மனோவிருத்தி யகண்ட மாகத், தக்கபிரா ரத்தவசத் தவராகிப் பிறந்திறந்து தளர்கின்றாரே.

இ - ள். அஞ்ஞானத்துக்கு உள்ளானவர்களே உலகமெ ங்குமுள்ளார். அந்தவுலகத்தில் விருப்புவெறுப்பு அற்றோரது மனோவிருத்தி அணுமாத்திரமாக அறிவு அகண்டாகார சொரூ பமாயிருக்கும். அப்படிச்சொரூபவிசாரணை பண்ணாத அஞ் ஞானிகள் அறிவு அணுவாக மனோவிருத்தி அகண்டாகாரமா கப் பெற்றுத் தமக்குத் தக்க பிராரத்தவசத்தராய்ச் சனனமர ணத்தில் அழுந்தி வருந்துகிறார். எ - று. (அ)

## உபரதி வைராக்கிய ஞானபலம்.

தோற்றுமுப ரதிவைராக் கியஞான மூன்றிவைக டொழிற்பட் டாரு, ளேற்றுமுப ரதியுடையார் பிரமாதி

பதமடைவ ரிகலோ கத்திற், போற்றும் வைராக்கியர்க்கு மப்பதமுண் டாஞானம் பொருந்தி னோர்க்குச், சாற்றரிய தனிமுத்தி சரீராந்தத் தெனவுரைப்பர் தகைமையோரே.

இ - ள். முத்தியடைவோர்க்கு உண்டாவன உபரதி, வைராக்கியம், ஞானம் என மூன்றும். இவற்றுள், பெண்டு பிள்ளை பண்டபதார்த்தங்களிலே யான் எனது என்கின்ற அபிமானம் நீக்கினதற்கு உபரதியென்றுபெயர். ஒருவருக்கு ஞான வைராக்யகிமில்லாமல் உபரதிமாத்திரமுண்டானால் அவர் சரீராந்தத்தில் பிரமலோகாதிபதங்களையடைவர். அந்தப் பிரமாதி பதத்திருணீகாரமே வைராக்கியம். ஒருவருக்கு ஞானவுபரதியில்லாமல் வைராக்கியமாத்திர முண்டானாலும், ஞானமில்லாமல் உபரதி வைராக்கியமுண்டானாலும், அவருக்கு இகலோகத்திலே புகழ்ச்சியும் சரீராந்தத்தில் பரத்திலே பிரமலோகாதியும் உண்டாம். ஆத்துமசொரூபத்தை அறிவதேஞானம். சம்ஸ்கார பலத்தினால் ஒருவருக்கு ஞான வைராக்கிய உபரதி மூன்றுங் கூடியிருக்கும், ஒருவருக்கு உபரதியும் ஞானமுங் கூடியிருக்கும், ஒருவருக்கு வைராக்கியமும் ஞானமுங் கூடியிருக்கும், ஒருவருக்கு வயிராக்கியமும் உபரதியுமில்லாமல் ஞானமாத்திரம் பொருந்தியிருக்கும். ஆகிலும், அவர்க்கு இவ்வாறென்று வாயாலளவிட்டுச் சொல்லக்கூடாததாகிய ஒப்பற்ற மோக்ஷம் உண்டாமென்று ஆத்துமவிசாரம் பொருந்தினவர்கள் சொல்வார்கள். எ - று. (சு)

## திரிபுடியியல்பு.

மெய்வாய்கண் ணுடுமூக்குச் செவியாலுண் பதுவிடயம் விடயம் யாவு, மைவாயி லரவெனவுற் றுணர்தன்மனோ விருத்தியவை யறிவ தாகிப், பொய்வாயின் செயல்க ளெல்லாந் தனதாய்கின் றிடல்சீவ போதம்

வேருய்த், தைவாய்வெண் பிறைபோலத் திரிபுடிக்குஞ்
சமசாட்சி தானே தானும்.

இ - ள். சுரோத்திராதியாகிய ஞானேந்திரியங்களினால் அனுபவிக்கப்படுவது விஷயம். அவ்விஷயங்களனைத்தையும் அவ்விந்திரியங்களையுற்று ஐந்தலைநாகம்போல அறிவது மனோ விருத்திஞானம். அவைகளையறிந்து மனத்தோடுங்கூடி இந்திரியச்செயலனைத்தையும் தனதாகப் பாவிப்பது சிதாபாசன். இவைகளின் வேருய்த் தைமாதத்தில் தோன்றிய வெள்ளிய சந்திரப்பிறைபோலச் சமனாய் இந்தத்திரிபுடியை நிருவிகாரமாயிருந்து அறியுஞ் சாட்சி தானே தானாகி விளங்கும். எ - று.

காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்னுந்திரிபுடியும் அதன் சாட்சியுங் கூறியது. (எ)

## அஞ்ஞானநீகளியல்பு.

ஓதரிய வஞ்ஞானந் தனையறியா வுணர்விதற்கோ
ருறுதி மூலம், மாதன்மனோ விருத்தியவை யகற்றியொளி
தனையறியு மகண்டா காரங், காதலினா லருளியசற் குரு
வருளாற் பெறுமகண்டா கார மாகுஞ், சாதகமே
தானாகி யிருப்பதே ததுசொரூப சாட்சி யாமே.

இ - ள். ஓதுதற்கரிய அஞ்ஞானமாவது தன்னையறியாத சீவவறிவு. இந்த அறிவை நித்தியம்பண்ணுவதற்கு முக்கியகாரணம் மனோவிருத்தியாம். அந்த அஞ்ஞான மனோவிருத்திகளை நீக்கிச் சாக்ஷியாயிருந்த கூடஸ்தசைதன்னியத்தையறிவது அகண்டாகாரவிருத்திஞானம். அன்பினால் அருள் செய்யப்பட்ட சற்குரு கிருபையினால் பெறப்பட்ட இந்த அகண்டாகார விருத்திக்குச் சாதகமாயிருந்தறிவது எது அதுவே சொரூபசாக்ஷியாகும். எ - று.

அஞ்ஞானம், மனோவிருத்தி, அகண்டாகாரவிருத்தி, சொரூபசாக்ஷி இவைகளினியல்பு கூறியது. (அ)

## விருத்தியுஞ் சீவனும் விபுவாதல்.

விருத்தியுஞ்சீ வனும்விடயத் தினைப்பார்க்கிற் பெரிதாம் விருத்தியின்ஞா னம்விடயாஞ் ஞானத்தை யகற்றின், விருத்தியுஞ்சீ வனும்விடையா காரமதா மது போல் விருத்தியுஞ்சீ வனுஞ் சத்தா காரமதா யமைந்தால், விருத்தியச்சீ வனைவிடயத் தினையறியுஞ் சாட்சி வேந்தனசை யாதிருந்து மேன்மைபெறுந் திறம்போல், விருத்திவிட யஞ்சீவன் சாட்சியிவை தோன்றா விபுவாவன் ஞானியென விளம்பு முப நிடதம்.

இ - ள். விருத்தியுஞ் சீவனும் விஷயத்தினைப்பார்க்கிலும் வியாபகமாகும். எங்ஙனமெனில், விருத்திஞானமானது கடாதிவிஷயவஞ்ஞானத்தைப் போக்கினால், அப்போது விருத்தியும் சீவனும் விஷயாகாரமாம். அதுபோலவே, விருத்தியும் சீவனும் அகண்டாகாரஞானத்தினால் சீவசாக்ஷியாயிருக்கின்ற கூடஸ்தரை மறைத்திருந்த அஞ்ஞானத்தைப் போக்கி அந்தக்கூடஸ்தரிசனம் பண்ணித் ததாகாரமானால், விவகாரதசையிலே அரசனானவன் தன்னிலையிலிருந்து கொண்டு தேசசமாசாரங்களையெல்லாம் அறிந்து மேன்மையைப் பெறுகின்ற திறமை போல, விருத்தியையும் சீவனையும் விஷயங்களையும் சாக்ஷியாய் நின்று அறிவன். இப்படிப்பட்ட ஞானியானவன் இந்தத்திரிபுடியும் சாக்ஷியுந் தோன்றாத பரிபூரணசொரூபத்தைப் பார்த்து அதுவாவன் என்று வேதாந்தஞ் சொல்லும். எ - று.

விருத்தியும் சீவனும் எந்தவிடத்தைப் பார்த்தாலும் அதுவாகையாலே, சின்மாத்திரமான விபுவைப்பார்த்தாலும் அதுவாவனென்பது கூறியது. (௯)

## விஷயமுதற் சாக்ஷிவரையில் ஒன்றுக்கொன்று விசேடமாமாறு.

போற்றியவிந் திரியமின்றி விடயமெலாந் தோன்று பொறிகளைந்துங் கரணமின்றிப் பொலிவொடு தோன்றுவால், சாற்றுகர ணமுஞ்சீவ னின்றியக்காற் றோன்று சாட்சியன்றிச் சீவனிலே தானுணர்வு தோன்று, தாற்றலினு லிந்தியங்கள் விடயமட்டு மறிவு மவ்விரண்டுங் கரணமறிந் திடுமவைமூன் றினையுந், தேற்றமொடு சீவனறி வுறுமவை நான்கினையுந் தெளிந்தறியுஞ் சாட்சியதீதப்பொருளா மிதுவே.

இ - ள். போற்றப்படுகின்ற ஞானேந்திரியங்களில்லாமல் விஷயங்களனைத்துந் தோன்றுவாம். அந்தக்கரணமில்லாமல் அவ்விந்திரியங்களனைத்துந் தோன்றுவாம். சீவனில்லாமல் அந்தக்கரணம் தோன்றுது. சீவசாட்சியில்லாமல் சீவனிலேயினுணர்ச்சி தோன்றுது. ஆகையால், இந்திரியங்கள் விஷயமட்டுக்குமறியும். விஷயங்களையும் இந்திரியங்களையும் அந்தக்கரணம் அறிந்திடும். அந்தவிஷயேந்திரிய கரணங்களைத் தெளிவோடு சீவனறியும். இவை நான்கினையும் சீவசாட்சி தெளிந்து அறியும். இந்தச்சாட்சிசைதன்னியமே அதீதப்பொருளாம். எ - று. ()

### அவஸ்தாத்திரயசாக்ஷி.

கற்பனைசெய் யவத்தைகளுமூன் றினுக்குஞ் சாட்சிகலந் தொருதன்மை யினிலகுங் காட்சி கூறிற்,' சிற்பரவுஞ் சாக்கிரத்திற் சாட்சி தானே செடசாட்சி யாயிருக்குந் தியக்க மான, சொப்பனத்தின் மனோவிருத்தி தனக்கே சாட்சி சூனியமாஞ் சுழுத்தியிலஞ் ஞானமான, வற்பநெறி யானந்த மதற்கே சாட்சி யனைத்தினுமிவ் வாறிருந்தோர்ந் தறியுங் காணே.

இ - ள். கற்பனையாயிருக்கும் சரீரத்திரயத்தைப் பற்றிய அவஸ்தாத்திரயத்திற்குச் சாக்ஷியானது பொருந்தியும் பொருந்தாமலுமிருக்கும் அனுபவங் கூறவேண்டில், சித்துவிலாசமாயிருக்கும் சாக்கிரத்திலே சாக்ஷியானது தப்தாயபிண்டம்போலத் துவம் அகம் என்கிற சீவாத்தும பக்ஷமாகியும் நிருவிகாரத்தினால் சரீரசாக்ஷியாகியுமிருக்கும். இந்தச் சாக்கிரத்துவாசனாமயமாகிய சொப்பனாவஸ்தையில் கமலபத்திரோதகம்போல் அந்தராத்மபக்ஷமாகியும் நிருவிகாரத்தினால் மனோவிருத்திக்குச் சாக்ஷியாகியுமிருக்கும். இந்தச் சொப்பன சாக்கிரப் பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் பீஜமாகியும் அப்பிரபஞ்சத்தோற்றரவற்றிருக்கிற சுழுத்தியவஸ்தையிலே லோகவிவகாரத்திற்குச் சூரியன்போலப் பரமாத்துமபக்ஷமாகியும் நிருவிகாரத்தால் அஞ்ஞானரூபமான அற்பநெறியால் வருகின்ற ஆனந்தத்துக்குச் சாக்ஷியாயிருக்கும். இம்மூன்றிலும் இப்படியிருந்தறியும். எ - று. (கக)

விருத்திஞானத்திரயத்தால் அஞ்ஞானத்திரய நிவிர்த்தி.

அரியவிருத் திகண்மூன்று லகலுமஞ்ஞா னங்களின்ன மாய்ந்து கூறிற், றெரியுமனோ விருத்தியினால் விடயாஞ்ஞா னங்களெல்லாஞ் சிதையு மேலாய்ப், பிரிவிலகண் டாகார விருத்தியிற்சாட் சியையறியாப் பெந்த நீங்கு, முரியவிவே கவிருத்தி யகண்டாகார முங்கடந்தங் கொன்று மன்றே.

இ - ள். அரிதாகிய விருத்தித்திரிபுடியினால் அஞ்ஞானம் நிவிர்த்தியாகும். இன்னம் ஆராய்ந்து சொல்லில் தெரிகின்ற மனோவிருத்திஞானத்தினால் விஷயாஞ் ஞானங்களெல்லாம் அழிந்துபோகும். இதற்கு மேற்பட்டுப் பிரிவில்லாத அகண்டாகார விருத்திஞானத்தால் கூடஸ்தரை அறியாதபடி மறைத்திருந்த அஞ்ஞானம நீங்கும். முத்தியைத் தருதற்குரிய விவேகவிருத்திஞானம் அகண்டாகார விருத்தியையுங் கடந்து அகண்

டாகாரவிருத்தியும் சீவனும் சீவசாக்ஷியுமாகிய இம்மூன்றையுஞ் சுத்தசைதன்னியமாக்கித் தானும் ததாகாரமாம். எ - று. (கஉ)

## தத்துவோற்பத்திலயக்கிரமம்.

பேசரிய பரத்தினிலா ரோபமதா மூலப் பிரகிருதி தோன்றுமிதிற் சாத்திகமா மாயை, யீசனிதிற் றோன்று மிரா சதமவித்தை சீவ னிதிற்றோன்றுந் தாமதத்தா வரணம்விட்சே பமதாஞ், சூசகவிட் சேபமதிற் சூக்கு மபூ தமதாஞ் சூக்கவுட லிருகுணத்தாற் றோன்றிடுந் தாமதத்தின், மாசில்பஞ்சீ கரணமதா லைம்பூத வடிவாய திற்றூல சடங்கோன்று மனைத்துமிவ்வா றடங்கும்.

இ - ள். அவாங்மனோ கோசரமாயிருக்கின்ற பிரமத்தினிடத்தில் விவர்த்தமாக இரச்சுவில் சர்ப்பத்துவம்போல் மூலப் பிரகிருதியென்கிற ஒருசத்தி தோன்றும். இந்தச்சத்திக்கு விகிருதமான சத்துவம், ரஜசு, தமசு என மூன்றுகுணமுண்டு. இவற்றுள், சத்துவகுணத்திற்கு மாயையென்றும் ஈசுரகாரணசரீரமென்றும் பெயர். இந்தமாயையில் சைதன்னிய பிரதிபிம்பமாகிய ஈசுவரன் தோன்றுவன். இவனுக்குச் சர்வஞ்ஞனென்றும் பெயர். இந்த வீசுவரன், சத்துவத்தின் ரஜசு, சத்துவம், தமசாகிய மூன்றுகுணத்திலும் பிரதிபிம்பித்து முத்தொழிலும் நடத்துகையால், பிரமா விட்டுணு ருத்திரனென்று பேருண்டாயிற்று. இரசோகுணத்துக்கு அவித்தையென்றும் சீவகாரணசரீரமென்றும் பெயர். இந்த அவித்தைகளில் சைதன்னிய பிரதிபிம்பமான சீவர்கள்தோன்றுவர்கள். இச்சீவர்கட்குக் கிஞ்சிஞ்ஞன் சிதாபாசன் என்றும் பெயர். சீவன் ரஜசின் சத்துவம், ரஜசு, தமசு என்கின்ற மூன்றுகுணங்களில் பிரதிபிம்பிக்கையால், தத்துவஞானியென்றும், காமக்குரோதனென்றும், சோம்பு நித்திரையுடையவனென்றும், பெயர்பெறுவன். தமோகுணத்தில் ஆவரணம் விட்சேபம் என்றிரண்டு சத்திகளுண்

டாம். இவற்றுள், ஆவரணசத்தியானது ஈசுவரனுக்கும் சீவன் முத்தருக்குந்தவிர மற்றச்சீவருக்கெல்லாம் சரீரத்திரயசாக்ஷி சைதன்னியங்களை ஒன்றற்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இந்த ஆவரணம் நீங்கினதே முத்தி. விக்ஷேப சத்தியினிடத்தில் அபஞ்சீகிருத சூக்குமபூதங்கள் தாமதத்தின் முக்குணத்துடனே பிறக்கும். இந்தப் பஞ்சபூதங்களின் தாமத சத்துவகுண முற்பாதியிலே சமட்டி வியட்டிரூபமாக உண்டானது அந்தக்கரணம் - ரு. பிற்பாதியில் வியட்டிரூபமாக உண்டானது சுரோத்திராதிகளான ஞானேந்திரியம் - ரு. தாமத குண ரசோகுணமுற்பாதியில் சமட்டி வியட்டி ரூபமாக உண்டானவைகள் பிராணுதிவாயுக்கள் - ரு. பிற்பாதியில் வியட்டி ரூபமாக உண்டானது வாக்காதியானகன்மேந்திரியம் - ரு. இந்தச்சாத்துவிகத்தினுலும் ராசதத்தினுலும் சூக்குமசரீரமென்று சொல்லப்படும் இவ்விருபது தத்துவங்களுமுண்டாம். சீவர்களும் அநேகரானபடியினுல் இந்தச் சூக்குமசரீரமும் அநேகமாயிருக்கும். சூக்குமபஞ்சபூத தாமத தமோகுணத்தில் பஞ்சீகிருத தூலபஞ்ச பூதங்களுண்டாம். இந்தப்பூதத்தினின்றும் ஆறுதத்துவமாய் நால்வகைப்பிறப்பாய் எழுவகைச்சாதியாயிருக்கின்ற தூலசரீரங்கள் தோன்றும். இப்படித் தோற்றின தூலசரீரமான அன்னமயகோசதத்துவம் - சு. சூக்குமசரீரதத்துவம்-உ0. பூதம் - ரு. மாயை, அவித்தை, ஈசுவரன், சீவன், பிரமம் - ரு. ஆக தத்துவம் - ௩௬. இந்த முப்பத்தாறில் அநாதியாயிருக்கிற பிரமம் நீங்கலாகக் கற்பிதமாயிருக்கின்ற தத்துவம் - ௩ரு-ம் பிரகிருதியில் தோன்றினபடியே சகலமும் பிரகிருதியிலொடுங்கிப் பிரகிருதியும் பிரமத்திலொடுங்கும். எ - று. (கரு)

பிரகிருதிமுதலியவற்றினிவிர்த்தி.

பகர்வரிய முதற்பொருளின் விவர்த்தமதா மூலப் பகுதியிந்த வுலகமெய்யாப் பார்த்திடுதன் மாயை, யக முடலென் றிருப்பதுவே யவித்தை [illegible] வங்களைத்

MAHAMAHOPADHYAYA DR U.V. SWAMINATHA IYER LIBRARY MADRAS

தையுந்தா னெனமறைப்ப தாவரணம் விடய, சுகவிரு த்தி விட்சேப மிவைகளைந்து மடவே தொலைதல்பரி பூரணத்தாற் சோதனைத்தற் பதத்தான், மிகவுணருந் தொம்பதத்தாற் றத்துவஞா னத்தால் விதேகமுத்தி யதனாலும் விடப்படுதல் வீடாம்.

இ - ள். சொல்லுதற்கரிதாகிய அதிட்டான சைதன்னியத் தினிடத்திலே விவர்த்தமாக ஏகதேசத்திலுண்டாய்த் தனக்கு அதிட்டானசைதன்னியமாகிய பிரமத்தைத் தானே பிரபஞ்ச மாகத் தோற்றுவிப்பது பிரகிருதி. இந்த நாமரூபாத்மகமான பிரபஞ்சத்தைச் சத்தியபுத்தி பண்ணுவது மாயை. சரீரத்திரய த்தையும் தானெனப்பண்ணுவது அவித்தை. இருபத்தொன் பது தத்துவத்திற்கும் பேதந்தெரியவொட்டாமல் தானென்னும் படி மறைப்பது ஆவரணம். விஷயசுகத்தை இச்சித்து எழும் பின விருத்தி விக்ஷேபம். இவையைந்தும் முறையில் யதார் த்தமாகிய பரிபூரணஞானத்தினால் பிரகிருதியும், தற்பதசோ தனையில் அதிட்டானசைதன்னியஞானத்தினால் மாயையும், துவம்பதசோதனையில் சிவசாக்ஷியையறிதலால் அவித்தையும், தத்துவவிசாரணையால் ஆவரணமும், விதேககைவல்யத்தால் விக்ஷேபமும், தொலையும். இவ்வைந்தாலும் விடப்படுதலே வீடாம். எ - று. (கச)

## பிரமசப்தாவஸ்தை.

சோதிதா னுயிருந்தாற் பிரமமதா மாயையிலே தோய்ந்தா லீசன், காதலவித் தையிற்கூடிற் சீவனும் பிரமாதா கரணந் தோய்ந்தான், மேதகுமிந் தியஞ்சே ர்ந்தாற் பிரமாண மறியாத விடயத் தெய்தல், யாத துவே பிரமேய மறிவதிற்போந் தாற்பலமே மூவத்தை கூடும்,

இ - ள். சுவயம்பிரகாசமாயிருக்கின்ற சைதன்னியம் நிரு பாதிகமாயிருந்தால் பிரமமென்று பெயர். மாயையில் பிரதி பலித்தால் ஈசுரனென்றுபெயர். இச்சாமயமாகிய அவித்தையில் பிரதிபலித்தால் சீவனென்று பெயர். கரணசபளிதமானால் பிர மாதாவென்று பெயர். மேம்பாட்டிலேயுடைய இந்திரிய சபளி தமானால் பிரமாணமென்று பெயர். பரோக்ஷவிஷயங்களிற் கூடில் பிரமேயமென்று பெயர். பிரத்தியக்ஷவிஷயத்துடனே கூடில் பலமென்றுபெயர். இப்படிச் சைதன்னியமொன்றே ஏழவஸ்தாநாமங்களைப் பெறும். எ - று. (கரு)

## அஷ்டப்பிரமாணம்.

உற்றெதிரே காண்டல்பிரத் தியட்சமனு மான
மோங்குபுகை கண்டுநெருப் புண்டெனவே யுணர்தன்,
மற்றுவமை மரைபசுப்போ லெனல்சத்தம் பெரியோர்
வாய்ச்சொலருத் தாபத்தி மதத்தவுட லதனு, லற்றவுப
வாசியொளித் துண்பானென் றுணர்த லபாவமுன்பி
னிடை யொருகா லத்துமிலை யென்று, னற்றியவிம் மர
த்தினிற்பே யுண்டெனலே தீகநாட்டுதலே சம்பவம்ப்ர
மாணமெட்டா நவிலும்.

இ - ள். எதிராகக் கடமுதலியவற்றை உற்றுக் காண்பது பிரத்தியக்ஷப்பிரமாணம். இது சந்தேகப்பிரத்தியக்ஷம், விபரீ தப்பிரத்தியக்ஷம், யதார்த்தப்பிரத்தியக்ஷம், என மூன்றுவகை ப்படும்; கட்டையைக்கண்டு கள்ளனோ தறியோவென்பது சந் தேகப்பிரத்தியக்ஷம். கட்டையைக் கள்ளனென்று நிச்சயிப்பது விபரீதப்பிரத்தியக்ஷம். கட்டையைக் கட்டையென்றறிவது யதார்த்தப்பிரத்தியக்ஷம். அனுமானப்பிரமாணமாவது புகை யைக் கண்டு நெருப்புண்டென்று நிச்சயிப்பது. இது பிரதிக் கினை, ஏது, திருட்டாந்தம் என்னும் மூன்றையுங்கொண்டிருக் கும். அவைகளில், பருவதம் அக்கினியுடைத்தென்பது பிரதிக்

கினை. தூமமுள்ளதாலென்பதே ஏது. மகானசம்போலவென் பதே திருட்டாந்தம். பசுப்போலிருக்கும் மரையென்பது உவ மானப்பிரமாணம். சத்தப்பிரமாணமாவது உண்மையைச் சொ ல்லுகின்ற பெரியோர்களது வாய்ச்சொல்லாம். அருத்தாபத்திப் பிரமாணம் நித்தியவுபவாசியென்று இருக்கின்றவனுடைய தேக பீனத்துவத்தினால் ஏகாந்தத்தில் புசிப்பானென்றறிவது. அபா வப்பிரமாணமாவது பிராகபாவம், பிரத்துவம்ஸாபாவம், அன் னியோன்னியாபாவம், அத்தியந்தாபாவம் என நான்குபேதமா யிருக்கும். இவைகளில், குயவன் கிரிகைமண்ணைப்பார்த்து இதில் கடமுன்னில்லையென்பது பிராகபாவம். உண்டான கடம் பின்னில்லையென்பது பிரத்துவம்ஸாபாவம். கடத்தில் படமும் படத்தில் கடமுமில்லையென்பது அன்னியோன்னியா பாவம். சசஞரவிந்தம் ஒருகாலுமில்லையென்பது அத்தியந்தா பாவம். இந்தமரத்தினில் பேயுண்டென்று கர்ணமூலமாய் வழ ங்குவது ஐதிகியப்ரமாணம். ஒன்றுண்டானால் பத்து நூறு ஆயி ரம் உண்டாமென்பது சம்பவப்பிரமாணம். இங்ஙனம் பிரமா ணங்கள் எட்டென்று சொல்லப்படும். எ - று. (கசு)

## சீவசப்தாவஸ்தை.

மன்னியதோ ரஞ்ஞானந் தனையறியா ததுமறைப்பா வரண மாகும்,பன்னியவிட் சேபமென தெனலாப்த வா க்கியமே பரோட்ச ஞானந், தன்னிலே தா னைதுவே யப ரோட்சங் கண்டதொரு சந்தோடத்தி,னந்நிலே யேதுக்க மும்போ யானந்த மடைவதுமே மூவத்தைப்பேறும்.

இ - ள். நீ சொன்னவர்த்தம் நானறியேனென்பதே அஞ் ஞானம். இது அஞ்ஞானமென்றால், நீ சொன்னவர்த்தம் அறி யேனென்கிற அறிவு வரவேதுவில்லை. இது அறிவுதானென்றால், நான் அறியேன் என்கிற மயக்கம் வரவேதுவில்லை. இந்த அரு த்தாபத்திப்பிரமாணசித்தமாய்த் தன்னை மறக்கின்றதே நிலையெ

ற்ற அஞ்ஞானம். இருபத்தொன்பது தத்துவத்தையும் ஒன்றுக் கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைத்திருப்பதே ஆவரணம். சரீராதிப்பிரபஞ்சவாசனை பண்ணின விருத்தியே விக்ஷேபம். சற்கருமபரிபாகத்தினால் சொர்க்காதிலோகம்போலப் பிரமமொன்றுண்டென்னும் ஆப்தவாக்கியநிச்சயபுத்தியே பரோக்ஷஞானம். சற்கர்மபரிபாகத்தினாலும் குருகடாக்ஷத்தினாலும் காலபரிபாகத்தினாலும் பரோக்ஷமாகக் கேட்கப்பட்ட பிரமமைதன்னியமே தானானது அபரோக்ஷஞானம்.ஏகதேசமாகிய சீவாவஸ்தையில் சனனமரணசம்சார துக்கமெல்லாம் தன்னுடையதல்லவென்பதே துக்கநிவிர்த்தி.அந்தத் துக்கந்தோன்றாத ஆனந்தமே தடையற்றவானந்தம். ஆகிய இவைகள் ஏழவஸ்தையாம். எ-று.

அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷஞானம், அபரோக்ஷஞானம், சோகநிவிர்த்தி, தடையற்றவானந்தம் என்னுமேழவஸ்தைக்கும் அனுபவங் கூறியது. (கஎ)

## தூலசரீரமுதல் பிரமம்வரைக்கும் திருட்டாந்தம்.

கடவடிவு தூலசடங் கடசலமே காரணங் கடசலத்தி லழுக்கவித்தை கடசலவான் சீவன்,கடவெளிமேல் வெளிசாட்சி சத்தாமிவ் விரண்டுங் கடசலம்போற் றனுகரணங் கலங்கினுந்தான் கலங்காக், கடசலம்வற் றாநிழல்போ லாசையினா லவித்தை கலந்துநின்ற திரவியெதிர் கடசலம்போ யுளதாங்,•கட வெளிமேல் வெளிபோற்சற் குருவருளா னன்குங் கரந்துசட சாட்சிசத்தாய்க் காண்பதத்து விதமே.

இ - ள். கடத்தைப்போலத் தூலசரீரம். கடத்திற்பூரித்த சலம்போல அந்தக்கரணம். சலத்தின்மலினம்போல அவித்தை. கடசலத்தில் ஆகாசப்பிரதிபிம்பம்போலச் சீவன். கடத்துக்குளிருக்கும் ஆகாசம்போலச் சீவசாட்சியாகிய கூடஸ்தர். கடத்

துக்குப் புறம்பேயிருக்கும் மகாகாசம்போல வியாபகமாகியபிர மசைதன்னியம். கடத்துக்குள்ளாகாசமும் வெளியாகாசமும் நிரவயவமாயிருப்பதுபோலச் சீவசாட்சிசைதன்னியமும், சர்வ சாட்சிசைதன்னியமும், சத்தாகாரமாயிருக்கும். கடசலம் சல னப்படும்போது பிரதிபிம்பாகாசத்துக்குச் சலனமுண்டாவது போல அந்தக்கரணவிகாரத்தினால் அவித்தியாப்பிரதிபிம்பசை தன்னியனாயிருக்கும் சிதாபாசனுக்கும் விகாரமுண்டு. கடசல மும் பிரதிபிம்பாகாசமும் சலனத்தையடையும்போது கடசலத் துக்கிடங்கொடுத்துச் சலத்துடனே தான் வியாபித்திருந்தும் கடாகாசம் நிருவிகாரமாயிருப்பதுபோல் உபாதிபேதத்தினால் இரண்டுபோலக் காண்பிக்கும் சீவசாட்சி சைதன்னியமும் அந்தக் கரணத்துடனே வியாபித்திருந்தாலும் நிர்விகாரமாயே யிருக் கும். கடத்திற்குள்ளே சலத்தை மேன்மேலும் விட்டு நிழலில் வைத்திருந்த காலமெல்லாம் சலமும் வற்றாமல் பிரதிபிம்பமும் தோற்றியே யிருப்பதுபோலக் காமக்குரோதாதிகள் வர்த்தித்த காலமெல்லாம் வர்த்திக்கும் சிதாபாசனுக்கு நாசமில்லை. கடத்திற் சலம் மேன்மேலும் பூரியாமல் கடத்திலடங்கின சலத்தை ஆதி த்தன் சன்னிதானத்திலே வைத்தால் அவன்கிரணத்தினால் சல மும் சோஷித்து அழுக்கும் படிந்து பிரதிபிம்பமும் போனாற் போலச் சற்கர்மபரிபாகத்தினாலும் சற்குருகடாக்ஷத்தினாலும் மனோலயமாகி அவித்தையுங்கெட்டுப் பிரதிபிம்பசொரூபனாகிய சீவனும் தனக்கதிட்டானசைதன்னியமாத்திரமாகவே சேஷிக் கும். கடசலம் வற்றின காலத்தில் கடாகாசமென்றும் மகாகாச மென்றும்பேரானாற்போல உபாதிபேதத்தினால் சீவசாட்சியென் றும் சர்வசாக்ஷியென்றும் இரண்டுபோலிருக்கும். கடமுடைந்த மாத்திரத்தில் மற்ற மூன்றுடனே கடாகாசமென்கின்ற பேரும் போய் மகாகாசமொன்றேயானாற்போலத் தேகாதிப்பிரபஞ்ச த்தை மித்தையாகக்கண்டகாலத்தில் சீவசாக்ஷியென்பது போ ய்ச் சுத்தசைதன்னியமாத்திரமாய்க் காண்பது அத்துவிதானு பவமாம். எ - று.

தூலசரீரம், அந்தக்கரணம், அவித்தை, சீவன், சீவசாட்சியாகிய கூடஸ்தர், பிரமசைதன்னியம் ஆக ஆறிற்கும் அனுபவங் கூறியது. (கஅ)

## துவம்பத தற்பதானுபவம்.

தொம்பதத்தி லுபாதிகெடச் சொரூபமதா மதுவே தொன்மையதாந் தற்பதசோ தனைசெயவும் வேண்டுந், தம்பவுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு முதலாஞ் சாற்றுதன்மாத் திரைப்பகுதி தானுமிருப் பதனு, னம் பரிபூரணமறைந்து ஞானமின்றி முனம்போ னுடுமுயிராதலினு னுதனருட் படியே, யிம்பருபா தியும்போய்நிருபாதிகமா மதனு லெப்பொருளப் பொருளாகி யிருப்பதுதன் னியல்பே.

இ - ள். துவம்பதத்தில் உபாதியாகிய சரீரத்திரயமும் சீவனும் நீங்கினால் சீவசாட்சியாகிய கூடஸ்தர் பிரகாசமாம். அந்தச் சைதன்னியமே அநாதியாயிருப்பதாம். ஆகிலும் தத்பதசோதனையும் பண்ணவேண்டும்; அதேனென்னில், சரீரத்திரயத்துக்கும் சீவனுக்குங் காரணமாயிருக்கின்ற தன்மாத்திரையும் பிரகிருதியும் ஈசுவரனும் நித்தியமென இருப்பதனால். பரிபூரணசொரூபமும் மறைந்து சாக்ஷாத்கார ஞானமுமில்லாமல் முன்போலச் சீவத்துவவாசனை வரும். ஆகையால் நாதனால் அருளப்பட்ட வாக்கியப்படி தத்பதசோதனையைப் பண்ணுமிடத்தில் ஈசுவரவுபாதியையும் ஈசுவரனையும் மித்தையாகக் காணுதலினால் இவைகட்கெல்லாம் தாரகமாயிருக்கின்ற பிரகிருதியும் பிரமசொரூபமாம். இப்படிச் சிவேசுவரவுபாதி கழிதலினால் யாதொருபொருள் யாதோரியல்பாய்த் தோற்றினும் அவையெல்லாம் தன்னுடைய விவர்த்தமாகக் காண்பதே அனுபவசுபாவம். எ-று.

துவம்பத தத்பதசோதனையில் சுவரூபவியாபகானுபவங் கூறியது. (கக)

## பஞ்சைக்யம்.

ஈசனுக்குத் தூலவுடல் பூதபௌ திகமே யீசனுக் குச் சூக்கவுட லிருவகைச்சூக் குமமே, யீசனுக்குக் காரணமா முடன்மாயை யவனே யீசனவன் சாட்சியே பிரமமிவை யைந்தா, மீசனுக்குஞ் சீவனுக்கு மைக்ய மெவ்வா றென்னி லீசனுடன் மூன்றனைப்பார்த் திடிலி வனுக் குடலே, தீசனெனி லிவனிலையீ சுரசாட்சி யெ ன்று லிவன்சாட்சி வேறேறுமற் றிதுவேபஞ் சைக்யம்.

இ - ள். ஈசனுக்குத் தூலசரீரமாவது தூலபஞ்சபூதமும் தூலபௌதிகசமட்டியும், சூக்குமசரீரமாவது சூக்கும பூதமும் சூக்குமபௌதிக சமட்டியும், காரணசரீரமாவது மாயையுமாம். இந்தச்சரீரத்திரயத்தையுடையவனே ஈசுவரன். இவனுக்குச்சா ட்சி பிரமசைதன்னியம். இவையைந்தாம். இவ்வைந்தினையு டைய ஈசுவரனுக்கும் சீவனுக்கும் ஐக்கியமெப்படியென்னில், ஈசுவரனுடைய தூலசரீரமாகிய விராட்டைப் பார்த்தால் சீவ னுடைய தூலசரீரம் விராட்டிலே அடங்கினபடியால், இவனுக் குத் தூலசரீரமில்லை. ஈசுவரனுடைய சூக்குமசரீரமாகிய இரணி யகருப்பத்தைப் பார்த்தால், இவனுடைய சூக்குமசரீரம் அதி லடங்கினபடியால் இவனுக்குச் சூக்குமசரீரமில்லை. ஈசுவரனு டைய காரணசரீரமாகிய மாயையைப்பார்த்தால் இவனுடைய காரணசரீரம் அதிலடங்கினபடியால் இவனுக்குக் காரணசரீர மில்லை. ஈசுவரனைப்பார்த்தால் இவன் அவனிலடங்கினபடி யால் இவன் வேறில்லை. ஈசுவரசாக்ஷியாகிய பிரமத்தைப் பார்த் தால் இவன்சாட்சி அதிலடங்கினபடியால் அது வேறில்லை. இதுவே பஞ்சைக்கியம். எ - று. (௨0)

## அத்துவைதநிலை.

தேகமே தானெனல்சீ வத்தொய்த மதுபோய்த் தெளிவுவரி லாகாயத் தின்வடிவே தானுய்ப், போகமாங்

தனுகரணம் வாயுவைப்போ லியங்கப் பொருந்துமவ னேயீச னப்பொலிவு தன்னி, லேகமா யண்டமெலாங் கடுகளவாய்த் தோன்று மவையகண்டா காரமது வேயீ சத் தொய்த, மாகமா மகண்டாகா ரமுநீங்கிக் கடுகா வண்டமுந்தோன் றுதவிடத் தத்துவித நிலையே.

இ - ள். அவித்தியாசகிதனுய்ச் சரீரத்தைத் தானென்பது சீவத்வைதம். விசாரஞானத்தினுல் சரீரம் தானல்லவென்று கண்டால் ஆகாசம்போல வியாபகனுய் அவ்வாகாசத்திலே வாயு வியாப்பியமாயிருப்பதுபோலத் தனுகரணபுவனபோகமாயிரு க்கின்ற அண்டபேதங்களெல்லாம் தன் வியாபகத்தில் வியாப்பி யமாயிருக்கப் பொருந்துகின்றவனே ஈசுவரனுவன். அந்தவீசுவ ரவியாபகத்திலே இந்த அண்டபேதங்களெல்லாம் கடுகுப்பிர மாணமாகத் தனித்தனியே தோன்றும். ஈசுவரவிராட்சரீரமா கிய இந்த அண்டபேதங்களையெல்லாம் தானெனல் ஈசுவரத் வைதம். ஆகாசத்தைப்போல நிறைவாயிருக்கிற ஈசுவரனுடைய சத்துவவுபாதியாகிய அகண்டாகாரமும் நீங்கில் சர்வசாட்சியா கிய தன்னுடைய வியாபகத்தில் கடுகளவாகவும் அண்டமுந் தோன்றுது. அதுவே அத்துவிதநிலையாம். துவம்பததத்பதல க்ஷணங்கூறியவை நீக்கத்தில் அனுபவங்கூறியது. (உக)

சீவன் எதைத் தியானித்தாலும் அந்தமயமாவனெனல்.

ஐயமின்றித் தெய்வவுருத் தியானித்தா லதுவா மருவுருவைத் தியானித்தா லட்டமூர்த் தியுமாம், பொ ய்யவிரண் டையுந் தவிர்ந்து தானுகி யிருந்தாற் பூரண மாஞ் சீவனெதிற் பொருந்துமது வாமான், மையலுறு மனம்விடயத் தாசையுற்றே யதுவாய் மரணசன னமும் விளைந்த வாறதென்றே யுணர்ந்து, மெய்யறிவே தானு க்ப் பாவித்தா லதுவாய் விளங்குவர்யா வருஞ்செனியா வீட்டையுமெய் துவரே.

இ - ள். சந்தேகவிபரீதமில்லாமல் சகளரூபமாயிருக்கின்ற மூர்த்தியைத் தியானித்தால் அந்தமயமாவன். சகளநிட்களமூர்த்தியாகிய ஈசுவரனைத் தியானம்பண்ணினாலும் அட்டமூர்த்திரூபமாயிருக்கின்ற ஈசுவரனாவன். மாயாகாரியமாயிருக்கின்ற இந்தவிரண்டினுபாசனையையும் விட்டு நிட்களத்தியானம் பண்ணினாலும் அந்தமயமாவன். சீவன் எதைத் தியானித்தாலும் அந்தமயமாவனென்பது சாத்திரசித்தம். ஆகையினாலே அஞ்ஞானகாலத்திலே மனோவிருத்தியானது கடாதிவிஷயாஞ்ஞானத்தைப் போக்கித் தானும் அந்த ஆகாரத்தையடையுமிடத்துச் சீவனும் அந்த ஆகாரமாகிறபடியினால் சனனமரண சம்சாரத்தையுடையவனாவனென்றுணர்ந்து நிருவிகாரமாகிய சைதன்னியத்தை மறைத்திருந்த அஞ்ஞானத்தை அகண்டாகாரவிருத்திஞானத்தினாலேபோக்கிச் சுத்தசைதன்னியத்திலே நேயம்வைக்கில், அக்கேவலசைதன்னியமேதானாக விளங்குவர். அப்படி விளங்கிய யாவரும் தேகாந்தத்தில் என்றுஞ் செனியாத வீட்டையும் அடைவர். எ - று. (உஉ)

இதற்கு இது விஷயமாமேனல்.

எற்றமுடை யிந்தியத்தின் விடையமதே யுலக மிந்தியங்கள் கரணத்தின் விடயங்க ளாகுஞ், சாற்றுகரணங்களுமா பாசனுக்கே விடயஞ் சாட்சிக்கு விடயமதாய்த் தயங்குவதா பாசன், போற்றுவிவே கஞ்ஞான விடையமதாஞ் சாட்சி புகன்றவிவே கமும்பிரம பூரணத்தின் விடயந், தோற்றரிய பிரமமொன்றின் விடயமன்று தலினச் சொரூபமிலே யுணர்ந்ததுவாய்த் துலங்குவர் ஞானிகளே.

இ - ள். நாமரூபப்பிரபஞ்சம் இந்திரியங்களுக்கு விஷயமாம். இந்திரியங்கள் கரணங்களுக்கு விஷயங்களாம். கரணங்கள் சீவனுக்கு விஷயங்களாம். சீவன் சீவசாக்ஷிக்கு விஷய

மாம். சாட்சியும் விவேகஞானத்துக்கு விஷயமாயிருக்கும். விவேகஞானம் பரிபூரண பிரமசைதன்னியத்துக்கு விஷயமாம். இந்தப்பரிபூரணபிரமசைதன்னியமான அறிவு ஒன்றுக்கும் விஷயமன்றும். ஆகையால் ஞானிகளும் இந்தச்சொரூபநிலையே தானென்று அறிந்து அதுவாய் விளங்குவர். எ - று.

பிரபஞ்சமுதல் பிரமம்வரை ஒன்றுக்கொன்று விஷயமாயிருத்தலையும் பிரமம் ஒன்றின் விஷயமல்லாததாயிருத்தலையுங் கூறியது. (உ௬)

## தாதான்மியத்திரயம்.

சகசமென்றும் பிராந்தியென்றுங் கன்மமென்று மூன்றுந் தாதான்மியங்களிவை சாற்றிலகங் காரம், புகல்சீவ னொடுகலத்தல் சகசமதாம் பிரம பூரணத்திற் கலப்பதுவே பிராந்திசரீ ரத்தோ, டகலாது கலப்பதுவே கன்மநா னறிவேன் கர்த்தாநான் றேகமக மென்பதுதானிவைகள், பகர்செய்பிரா ரத்தத்தாற் றத்துவ ஞானத்தாற் பணிசுழுத்தி யாலகலப் படுமளவுந் தொடரும்.

இ - ள். சகஜதாதாத்மியம், பிராந்திஜதாதாத்மியம், கர்மஜதாதாத்மியம், என்று தாதாத்மியங்கள் மூன்றும். இவைகளில் அகங்காரம் சீவனுடனே பொருந்தியிருப்பது சகஜமாம். பிரமத்துடனே பொருந்தியிருப்பது பிராந்திஜமாம். சரீரத்துடனே பொருந்தியிருப்பது கர்மஜமாம். இதற்கு அனுபவமெங்ஙனமென்னில், அகங்காரம் சீவதாதாத்மியமாய் நான் அறிவேனென்பது சகஜமாம். அகங்காரம் பிரமதாதாத்மியமாய் நான் கர்த்தா போக்தாவென்பது பிராந்திஜமாம். *அகங்காரம் சரீர தாதாத்மியமாய்த் தேகோகமென்பது கர்மஜமாம். இவைகளில் சகஜதாதான்மியம் பிராரப்தநாசத்தினாலும், பிராந்திஜதாதாத்மியம் தத்துவஞானத்தினாலும், கர்மஜதாதாத்மியம் சுழுத்

தியினாலும் நீங்கும். அம்மூன்றும் வாராதளவும் இத்தாதாத்மியங்கள் தொடர்ந்து நிற்கும். எ - று. (உ௪)

பஞ்சகோசதாதாத்மியம்.

அன்னமயம் பிராணமய மனோமயம்விஞ் ஞானமானந்த மயமைந்தி னன்னமய மாகும்,பின்னுடல் கன்மேந்தியத்திற் பிராணனது கூடிற் பிராணமய மனங்கூடிற் பிறங்குமனோ மயமா,நன்னிலைஞா னேந்தியமும் புத்தியுங்கூடிடில்விஞ் ஞானமய மாமவித்தை யானந்த மயமாஞ், சொன்ன வைந்துந் தானெனலே தான்மியமிவ் வெல்லாந் தோய்வறநின் றெனதெனல்காண் சுத்தவனு பவமே.

இ - ள். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்னுமைந்தில் சட்கோசதத்துவமாயிருக்கின்ற தூலசரீரமே அன்னமயகோசம். சூக்குமசரீரத்தில் பிராணனும் கன்மேந்திரியமுங் கூடியது பிராணமயகோசம். மனசுங் கன்மேந்திரியமுங் கூடியது மனோமயகோசம். புத்தியும் ஞானேந்திரியமுங் கூடியது விஞ்ஞானமயகோசம். காரணசரீரமே ஆனந்தமயகோசமாம். இவ்வைந்தையுந் தானெனலே தாதாத்மியங்களாம். இவையெங்ஙனமெனில், நான்பருத்தேன் இளைத்தேனென்பது அன்னமயகோசதாதாத்மியம். எனக்குப் பசிக்கிறது தாகிக்கிறது என்பது, பிராணமயகோசதாதாத்மியம். நான் சங்கற்பித்தேன் விகற்பித்தேன் என்பது மனோமயகோசதாதாத்மியம். நான் கர்த்தா போக்தாவென்பது விஞ்ஞானமயகோசதாதாத்மியம். நான் அறியேனென்பது ஆனந்தமயகோசதாதாத்மியம். இவைகட்கு அன்னியமாகநின்று என்சரீரம் என்பிராணன் என்மனம் என்புத்தி என்னஞ்ஞானம் என்னுமனுபவத்தினால் தனக்கு இப்பஞ்சகோசங்கள் வேறு விவகாரதசை தாதாத்மியமென்று அறிந்து அவற்றில் தோய்வறநின்று அறிவுவடிவமாகிய தன்னை உள்ளபடி காண்பதே சுத்தமாகிய அனுபவமாம். எ - று. (உ௫)

## சாக்ஷி சரீரத்திரயவிலக்ஷணமெனல்.

மொய்த்தாருஞ் சாட்சிக்குச் சரீரமான மூன்றினு
க்கு மன்னியமும் முடிவுங் கூறிற், கர்த்தாவாஞ் சாட்சி
க்கு ஞானத் தாலே காரணமாந் தேகமந்தக் கணத்தினு
சங், தொத்தாய காரணதே கர்தா னென்று தொலைவத
ன்முன் சூக்குமதே கங்கள் கோடி, யொத்தாய பிரளய
த்தி லொடுங்குஞ் சூக்க மொன்றொடுங்கு முனமனந்த
மொடுங்குந் தூலம்.

இ-ள். எங்கும் நிரம்பியிருக்கின்ற சாக்ஷிசை தன்னியத்துக்குச் சரீரத்திரய விலக்ஷணமும் சரீரத்திரயத்துக்கு நாசமுஞ் சொல்லுமிடத்தில், கர்த்தாவாகிய சாக்ஷியே தானாக விளங்கிய ஞானத்தினாலே அநாதியாயிருக்கின்ற காரணதேகம் அந்தக்கணத்தில் நாசமாம். அந்தக்காரணதேகமானது நாசமாகாமலிருக்குங்காலத்தில் சூக்குமசரீரங் கோடாகோடி சிருட்டிதோறுந் தோன்றிப் பொருந்துகின்ற பிரளயந்தோறு மொடுங்கும். ஒரு சூக்குமசரீரம் சிருட்டியிலுண்டாய்ப் பிரளயத்தில் நாசமடைவதற்குள்ளாகக் கோடாகோடிதூலசரீரம் தோன்றி மறையும். எ - று.

சாக்ஷிக்கு நாசமில்லாமையினால் நாசத்தையடைகின்ற சரீரத்திரயத்துக்கும் சாக்ஷி விலக்ஷணமென்பது கூறியது. (உசு)

## வஸ்துவை அணுவுக்கணுவெனல்.

ஆய்ந்தசுத்தத் தவியத்த பூதிலவ்வியா கிருத மத
னிலிர ணியகருப்ப மதனில்விராட் டடக்கம், வாய்ந்த
விராட் டினில்வானம் வானில்வளி வளியின் வன்னிவ
ன்னி யதில்வனமவ் வனத்தின் மண்டா னடக்கந்,தோ
ய்ந்தமண்ணிற் றூலசட மடக்கமதிற் சூக்கஞ் சூக்கும
த்தி லவித்தையதிற் றேய்சிவ னடக்கம், போந்தடங்கு

மதனையணு வென்பரிதி னடங்கும் பொருளையணு வுக்
கணுவாப் புகன்றிடுநான் மறையே.

இ - ள். பிரகிருதியினது காரியமாகிய சுத்தாவஸ்தைக்குச் சுத்தபூதம் - க. அவ்வியக்தாவஸ்தைக்கு வாசனாபூதம் - ரு. அவ்வியாகிருதாவஸ்தைக்குக் காரணபூதம் - ரு. இரணியகர்ப்பாவஸ்தைக்குச் சூக்குமபூதம்-ரு. விராட்டவஸ்தைக்குத் தூலபூதம் - ரு. இந்தச் சுத்தபூதவியாபகத்திலே அவ்வியக்தபூதமைந்தும், இந்த அவ்வியக்தபூதத்திற்குள் காரணபூதமைந்தும்,இந்த அவ்வியாகிருதபூதத்திற்குள் சூக்குமபூதமைந்தும், இந்த இரணியகர்ப்பபூதத்திற்குள் தூலபூதமைந்தும், இப்பூதங்களுள் ஆகாசத்தில் வாயுவும், அதில் அக்கினியும், அதில் அப்புவும், அதில் பிருதிவியும், பத்திலொன்று பத்திலொன்றாய்க் குறைந்து வியாப்பியமாயிருக்கும். இந்தத் தூலபிருதிவியில் சட்கோசதத்துவமாயிருக்கின்ற தூலசரீரசமட்டியுமடங்கும். அதில் சூக்குமசரீரசமட்டியுமடங்கும். அதில் காரணசரீரசமட்டியுமடங்கும். அதில் சீவசமட்டியுமடங்கும். அதிலடங்கிய வியட்டிசீவனை அணுவென்று சொல்லுவர். இந்தச் சீவனில் தத்ஸாக்ஷியாய் விளங்கியிருக்குஞ் சைதன்னியத்தை அணுவுக்கணுவென்று நான்குவேதங்களுஞ் சொல்லும். எ - று. (உஎ)

### வஸ்துவை மகத்துக்கு மகத்தெனல்.

அரிதான சீவனுக்குப் பஞ்ச கோச மைங்குகையா
மதின்குகையா மைம்பூ தந்தா, மிரியாத விராட்டிதுமற்
றிதற்கு மேலா மிரணியக ருப்பமதா மிதற்கு மேலாம்,
பெரிதாமவ் வியாகிருத மிதற்கு மேலாம் பேசருமவ்
வியத்தமிதிற் பெரிதாஞ் சுத்த, முரியார்க ளிதனைமகத்
தென்பர் மேலா மொளியைமகத் தின்மகத்தென் றுரை
ப்பர் மேலோர்.

இ - ள். அணுவான சீவனுக்கு வியாபகமாயிருக்கின்ற பஞ்சகோசங்களுள் அச்சீவனை ஆனந்தமயகோசமும், இதனை விஞ்ஞானமயகோசமும், இதனை மனோமயகோசமும், இதனைப் பிராணமயகோசமும், இதனை அன்னமயகோசமும், வியாபித்திருக்கும். இப்பஞ்சகோசங்களுக்கு வியாபகமாயிருக்கின்ற பஞ்சபூதங்களுள் இந்த அன்னமயகோசசமட்டியைத் தூலபிருதிவியும், இதனை அப்புவும், இதனை அக்கினியும் இதனை வாயுவும், இதனை ஆகாசமும் வியாபித்திருக்கும். இந்தத்தூல பூதமைந்திற்கும் பௌதிகசமட்டிக்கும் கெடாத விராட்டென்று பெயர். இதனை வியாபித்த சூக்குமபூதமைந்தும் ஒன்றையொன்று வியாபித்திருக்கும். இந்தச்சூக்குமபூதமைந்திற்கும் சூக்குமசரீரசமட்டிக்கும் இரணியகர்ப்பமென்று பெயர். இரணியகர்ப்பத்தை வியாபித்த காரணபூதமைந்தும் ஒன்றை யொன்று வியாபித்திருக்கும். இந்தக்காரணபூதமைந்திற்குங் காரணசரீரசமட்டிக்கும் பெரிதான அவ்வியாகிருதமென்று பெயர். இந்த அவ்வியாகிருதபூதத்தைவியாபித்த அவ்வியக்த பூதமைந்தும் ஒன்றையொன்று வியாபித்திருக்கும். இந்த அவ்வியக்தபூதசமட்டிக்குச் சொல்லுதற்கரிய அவ்வியக்தமென்று பெயர். இந்த அவ்வியக்தத்தைச்சுத்தபூதம் வியாபித்திருக்கும். இதற்குச் சுத்தமென்று பெயர். இந்தச்சுத்தாவஸ்தை வியட்டியைத் தத்துவசோதனையுள்ளவர்கள் மகத்தென்று சொல்வர். இதனைவியாபித்திருக்கும் ஒளியாகிய வஸ்துவை மகத்துக்கு மகத்தென்று பெரியோர்கள் சொல்லுவர்கள். எ - று. (உஅ)

சீவபோதாதி நீக்கத்தில் சுவரூபம் பிரகாசமாமெனல்.

தோற்றுமசத் தறிந்தகலத் தொடர்பகலுமேதெனிலித் தூல தேக, மாற்றுதொறுந்தொழிலகலு மிந்திரியச் செயலகன்றால் வைய நீங்கு, மேற்றுமனோ லயத்திலறும் விடயமவித் தையை நீங்கில் யாவு நீங்கும், போற்றுமந்தச் சீவவறி விழந்தவிடம் புகல்பரிபூரணம தாமே.

இ - ள். திருசியமாய்த் தோற்றுகின்ற அசத்துருபமாகிய சரீராதிப் பிரபஞ்சத்தை அநித்தியமென்றறிந்து அவைகளெல்லாம் தானல்லவென்று நீங்கில், அதின்வியவகாரங்கள் தன்னுடையவல்லவென்று போம். அதெங்ஙனமென்னில், என்சரீரமென்னும் அனுபவத்தினால் இந்தத்தூலசரீரந் தானன்றென்று கண்டால், தனக்குத் தொழினீங்கும். என்கண் என்காதென்னும் அனுபவத்தினாலே இந்திரியச் செயல்கள் தன்செயல்களல்லவென்று நீங்கினால், தனக்குப் பிரபஞ்சமில்லை. என்மனமென்னும் அனுபவத்தினாலே மனந் தானன்றென்று கண்டால், தனக்கு விஷயவாசனைகள் நீங்கும். என்னஞ்ஞானமென்னும் அனுபவத்தினால் அவித்தையைத் தானன்றென்று கண்டால், அஞ்ஞானமுதலியயாவும் நீங்கும். என் சீவனென்னும் அனுபவத்தினால் தான் சீவனன்றென்று கண்டால் முன் சொல்லப்பட்ட ஏகதேசமாகிய சீவபோதம் தன்னைவிட்டு நீங்கும். சீவபோதங்கெடவே, வேதாந்தங்களிற் சொல்லப்பட்ட அகண்டபரிபூரணசச்சிதானந்தசுவரூபமே தானாம். எ - று. (உகூ)

அஞ்ஞானநீங்குமுறை.

மாறாத வஞ்ஞான முழுதுமகல் வதுகூறின் வையந்தன்னின், வேறாகுற் காலகலு முடன்மூன்றுஞ் சீவனுக்கு வேற தாகு, னீறாகும் பாதிதற்சாட்சியைக் காணின் முக்காலு நீங்குறுந் தானைய்ப், பேறான சொரூப பரி பூரணமா னுன்முழுதும் பேசொணதே.

இ - ள். வியவகாரதசையிலே கெடுதலில்லாத அஞ்ஞான முழுதும் நீங்கும்வகையைச்சொல்லுமிடத்தில், ஜகத்தாதாத்மியத்தை நீங்கிச் சந்நியாசம்பண்ணில் அஞ்ஞானத்தில் நான்கிலொருபங்கு கெடும். துவம்பதசோதனையினால் சரீரத்திரயதாதான்மியமான சீவதரிசனம்பண்ணிச் சரீரத்திரயமுந் தானல்ல தான் இவற்றிற்கு விலட்சணனென்றறிந்தால், அஞ்ஞா

ணத்திற்பாதி கெடும். சிவனைதன்னியதாதாத்மியமான சிவசாக்ஷிசைதன்னிய தரிசனம்பண்ணவே முக்காற்பங்குகெடும். தத்பதசோதனைபண்ணி ஈசுவரசைதன்னியதாதான்மியமான பரிபூரணசைதன்னியதரிசனம்பண்ணி அதுவானால், அஞ்ஞான முழுதுங்கெடும். எ - று. (௯௦)

## முத்தர்பெத்தரிலக்கணம்.

முத்தரையும் பெத்தரையு முகக்குறியா னகக்குறியான் முழுதுந் தேரின், மெத்தெனவா கியமொழியு மானந்த பரவசத்தான் மிகுந்த சோர்வுஞ், சித்தநிலை திரியாத செல்வமுமா யிருப்பர்நல்லோர் தீயோரெல்லா, மித்தகைமை யோர்களையு மிகழ்ந்து புகழ்ந் தோர்க்குறவா யிருப்பர் தாமே.

இ - ள். முத்தரையும் பெத்தரையும் முகக்குறி யகக்குறிகளால் முழுதுமறியப்புகின், மிருதுவாகிய வசனம், ஆனந்தபரவசத்தினாலே மெய்ம்மறத்தல், பிராரத்தவசத்தினால் அட்டமாசித்திகள் வந்து பொருந்தினாலும் மனம் வேறுபடாமலிருத்தல் இவை முதலிய குணங்களுடன் கூடிக்கொண்டிருப்பவர் ஞானிகளாகிய முத்தரென்றறியத்தக்கவர். அஞ்ஞானிகளாகிய பெத்தரோவென்றால் இப்படிப்பட்ட ஞானிகளையிகழ்ந்தும் தம்மைப் புகழ்கிறவர்களுக்கு உறவாகியும் இகழ்கிறவர்களுக்குப் பகைவராயுமிருப்பர்கள். எ - று. (௯௧)

## அஞ்ஞானஞானங்களினிலக்கணம்.

ஏற்றபிர பஞ்சமதே நித்தமென்றும் பிரமமென்பதில்லை யென்றுந்,தோற்றுமுட றானென்றுந் துளங்குவதே யஞ்ஞான துக்க மாகுஞ்,சாற்றுபிர பஞ்சமெலா மநித்தமென்றும் பிரமமது தானே யென்றும்,வேற்றுடல்வெற்றுடலென்றும் விரிந்துணரப்பெறு மதுவேதாந்த ஞானம்.

இ - ள். பொருந்திய பிரபஞ்சமே நித்தியமென்றும் பிரம மென்பது இல்லையென்றும் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்ற சரீரமே தானென்றுங் கலங்குகின்றதே துக்கமயமாகிய அஞ் ஞானமாம். அஞ்ஞானிகள் நித்தியமென்று சொல்லுகின்ற பிரபஞ்சமெல்லாம் மித்தையென்றும் பிரமசொரூபமே தானெ ன்றும் தனக்கன்னியமாய்த் தூலசூக்குமகாரணமாகிய சரீரத் திரயங்களும் பொய்யென்றுங் கண்டு அகண்டாகாரமாய்த் தன்னை அறியப்பெறுகின்றதே வேதாந்தஞானமாம். எ - று. ()

தங்குருவைப்புகழ்தல்.

இருளகற்று நால்வேதத் துபநிடத மெண்ணொன்கி னெங்கோன் சொன்ன, பொருளதனை நெஞ்சகத்தே சௌபாக்ய குருவென்னும் பொருளி னோடு, மருளகற் றும் படியழுத்தித் தமிழ்போலு மதனையொரு வழியெ ண்ணான்கா, யருளகத்தி லிருந்துரைத்த வதிசயமே யதிசயமற் றறிகி லேனே.

இ - ள். அஞ்ஞானத்தை நிவிர்த்திபண்ணுகின்ற நாலு வேதங்களுடைய முப்பத்திரண்டுபநிஷத்துக்களிலெடுத்து எங் கள் சுவாமியாகிய வியாசமகாமுனி திருவாய்மலர்ந்தருளிய பொருளினைச் சௌபாக்கியகுருவென்னும் பொருளினோடும் அடியேனுடைய இருதயத்தின் மருட்சியகலும்படி அழுத்தித் தமிழென்று சொல்லப்பட்ட பாஷையில் அப்பொருளை ஒரு வழியாய் முப்பத்திரண்டு செய்யுளாக அருளானது உள்ளத்தி லிருந்து சொல்வித்த அதிசயமே அதிசயமல்லாமல் மறறோரதி சயம் அறியேன். எ - று.

இச்செய்யுள் இந்நூலாசிரியர் தங்குருவைப் புகழ்ந்து கூறியது. (௩௩)

உபநிடதவுரை முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRARY